வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu




Email : eelanaduweekly@gmail.com | மலர் : 07 | 02.07.2026 புதன்கிழமை | இதழ் : 177 | பக்கங்கள் : 08

# கைபேசி, கணினி கடவுச்சொற்களை சி.ஐ.டிக்கு உடனே வழங்கவேண்டும்!

## விசாரணையிலிருந்து ஷானியை நீக்கமுடியாது சுரேஷ் சாலேயுக்கு கொழும்பு நீதிமன்று உத்தரவு

கொழும்பு, ஜூலை. 02

**உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் தடுப்புக் காவல் உத்தரவின் கீழ் வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வரும் அரச புலனாய்வுச் சேவையின் முன்னாள் பணிப்பாளர் சுரேஷ் சாலே, தனது கையடக்கத் தொலைபேசி மற்றும் கணினி என்பவற்றின் கடவுச் சொற்களை (Passwords) விசாரணை நோக்கங்களுக்காக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக் வழங்குமாறு கொழும்பு கோட்டை நீதவான் பசன் அமரசேன நேற்று உத்தரவிட்டார்.**

இந்த விசாரணையில் இருந்து குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் தற்போதைய பணிப்பாளர் ஷானி அபேசேகரவை நீக்கவேண்டும் என்ற கோரிக்கையையும் நீதிமன்றம் நிராகரித்தது.

அத்துடன், கடந்த நீதிமன்றத் தவணையின் போது பிரதிவாதிகள் தரப்பால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் மீதான உத்தரவுகளையும் நீதவான் நேற்று பிறப்பித்தார்.

அதன்படி, பிரதிவாதிகள் தரப்பால் முன்வைக் கப்பட்ட முதலாவது கோரிக்கையான, இந்த 07

## பொருளாதார வளர்ச்சியை 7 வீதமாக்குவதே எம் இலக்கு!

### கூறுகிறார் ஜனாதிபதி அநுர



கொழும்பு, ஜூலை. 02

தற்போது 5 வீத மட்டத்தில் உள்ள நாட்டின் பொருளாதார வளர்ச்சியை எதிர்வரும் ஆண்டுகளில் 7 வீதம் முதல் 8 வீத மட்டத்துக்கு கொண்டு வருவதே அரசாங்கத்தின் எதிர்பார்ப்பு எனவும், அந்தப் பயணத்தில் தகவல் தொழில்நுட்பம், மின் மற்றும் இலத்திரனியல் துறைகளின் விரிவான பங்களிப்பை எதிர்பார்ப்பதாகவும் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்தார்.

தகவல் தொழில்நுட்பம், மின் மற்றும் இலத்திரனியல் துறைகளில் முன்னிலை வகிக்கும் முதலீட்டாளர்கள் மற்றும் தொழில்துறையினருடன் நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் கலந்துகொண்ட போதே ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

உள்நாட்டு தொழில்துறையினரை வலுப்படுத்துவதன் மூலமே நாட்டின் எதிர்காலத்தை பாதுகாக்க முடியும் என இங்கு சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, நாட்டிலுள்ள சாத்தியக் கூறுககளை 07

## ஆசிய அபிவிருத்தி வங்கி இலங்கைக்கு 200 மில். டொலர்!

கொழும்பு, ஜூலை. 01

இலங்கைக்காக 200 மில்லியன் அமெரிக்க டொலர் அவசர உதவி நிதியுதவிப் பொதியை ஆசிய அபிவிருத்தி வங்கி அங்கீகரித்துள்ளது. 07

## வவுனியா முன்னாள் முதல்வர் உட்பட நான்கு பேரை கைது செய்ய உத்தரவு!

வவுனியா, ஜூலை. 02

வவுனியா மாநகர சபையின் செங்கோல், முதல்வரின் பதக்கம் மற்றும் அதிகாரப்பூர்வ ஆடை காணாமற் போனதாகப் பதிவு செய்யப்பட்ட முறைப்பாட்டைத் தொடர்ந்து, முன்னாள் மேயர் உட்பட நான்கு பேரை கைது செய்து நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துமாறு வவுனியா நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

வவுனியா மாநகர முன்னாள் மேயர் உட்பட நான்கு பேரை கைது செய்ய நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளதாக, வவுனியா தலைமைப் பொலிஸ் நிலையப் 07

## அவசரகால நிலை நீடிக்காது!

கொழும்பு, ஜூலை. 02

பொது அவசரகால நிலையை இந்த மாதம் முதல் மேலும் நீடிக்கப்போவதில்லை என அரசாங்கம் அறிவித்துள்ளது.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ இதனைக் குறிப்பிட்டார்.

கடந்த வருடம் இறுதியில் ஏற்பட்ட டித்வா புயல் பேரழிவு காரணமாக மீட்பு பணிகள் உள்ளிட்ட பல்வேறு காரணிகளால் நாட்டில் பொது அவசர கால நிலை அமுல்படுத்தப்பட்டு பல்வேறு 07

## பஸ் கட்டணம் 12 வீதத்தால் அதிகரிப்பு!

கொழும்பு, ஜூலை. 02

பஸ் கட்டணம் 12 வீதத்தால் அதிகரிக்கப் பட்டுள்ளதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அறிவித்துள்ளது. அதனடிப்படையில், புதிய கட்டண திருத்தம் எதிர்வரும் 07

## யாழ். துணைவேந்தருக்கு எதிராக முன்னாள் கலைப் பீடாதிபதி மனு!

யாழ்ப்பாணம், ஜூலை. 02

யாழ்ப்பாண பல்கலைக்கழக துணைவேந்தர் , முன்னாள் மாணவிகள், முகநூல், ரிக்ரொக் மற்றும் யூரியூப் சமூக வலைத்தளங்கள் உள்ளிட்ட 14 பேரை எதிர் மனுதாரர்களாக கொண்டு பருத்தித்துத்துறை நீதவான் நீதிமன்றில் நிகழ்நிலை காப்புச் சட்டத்தின் கீழ் யாழ்.பல்கலைக்கழக முன்னாள் கலைப் பீடாதிபதி சிவசுப்பிரமணியம் ரகுராம் மனு தாக்கல் செய்துள்ளார்.

குறித்த மனு மீதான விசாரணை நேற்று புதன்கிழமை விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்ட நிலையில், மன்று வழக்கை எதிர்வரும் 10ஆம் திகதிக்கு 07

## இழுவைமடியை தடுக்கும் சட்டமூலம் சட்ட மா அதிபர் திணைக்களத்துக்கு!

கொழும்பு, ஜூலை. 02

சட்டவிரோத மீன்பிடி, இழுவைமடித் தொழில்களைக் கட்டுப்படுத்த புதிய சட்டமூலங்கள் இறுதி அனுமதிக்காக சட்ட மா அதிபர் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டுள்ளன என கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சிறு தொழிலாளர்கள் பாதிக்கப்படாதவாறு கடல் அட்டை பண்ணைகள் முறைப்படுத்தப்படும். காலநிலை மாற்ற பாதிப்புகளுக்கான 07

## உலக வங்கியிடமிருந்து இலங்கைக்கு 150 மில்லியன் டொலர்கள் நிதியுதவி!

கொழும்பு, ஜூலை. 02

2022 ஆம் ஆண்டு ஏற்பட்ட கடுமையான பொருளாதார நெருக்கடியிலிருந்து இலங்கை வெற்றிகரமாக மீட்சியடைந்துள்ளதை உலக வங்கி உத்தியோகபூர்வமாக உறுதிப்படுத்தியுள்ளது.

நாட்டின் தொழில்துறைகளில் ஏற்பட்டுள்ள மறுமலர்ச்சி, நிதி மற்றும் சுற்றுலாத் துறைகளின் சிறப்பான வளர்ச்சி காரணமாக 2025 ஆம் ஆண்டில் இலங்கையின் உண்மையான மொத்த உள்நாட்டு உற்பத்தி 5 வீதத்தால் வளர்ச்சியடைந்துள்ளது.

இதன் காரணமாக, உலக வங்கி இலங்கையை மீண்டும் 'உயர் நடுத்தர வருமானப் பொருளாதார' நாடாக வகைப்படுத்தியுள்ளது.

எனினும், இலங்கை இந்த வருமான வரம்பை மிகக் குறைந்த அளவிலேயே கடந்துள்ளது என்றும் உலக வங்கி சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை, இலங்கையின் இந்த பொருளாதார மீட்சிப் பயணத்தை மேலும் வலுப்படுத்தும் நோக்கில், உலக வங்கியின் நிறைவேற்று பணிப்பாளர்கள் குழு 150 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவியை அங்கீகரித்துள்ளது.

நாட்டில் முதலீடுகளை அதிகரித்தல், போட்டித் திறனை மேம்படுத்துதல் மற்றும் புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்குதல் ஆகியவற்றை மையமாகக் கொண்ட மறுசீரமைப்பு நிகழ்ச்சி நிரலுக்கு ஆதரவாகவே இந்த நிதி வழங்கப்பட்டுள்ளது.

(அ)

## இலங்கையில் உணவு பஞ்சம் ஏற்படுவதற்கு வாய்ப்பில்லை!

### விவசாய அமைச்சர் லால் காந்த

கொழும்பு, ஜூலை. 01

இலங்கையில் உணவுப் பஞ்சம் ஏற்பட வாய்ப்பில்லை என்று விவசாய அமைச்சர் லால்காந்த கூறினார்.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

"நாட்டில் உணவு தட்டுப்பாடு இல்லை. உணவுப் பாதுகாப்பு என்பது சிறந்த மட்டத்தில் உள்ளது. எனவே, உணவு பற்றாக்குறை குறித்து மக்கள் 07

## தனது உண்ணாவிரதத்தை கைவிட்டார் சுரேஷ் சாலே!



கொழும்பு, ஜூலை. 02

ஈஸ்டர் ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகளுக்காகக் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் காவலில் வைக்கப்பட்டுள்ள, அரச புலனாய்வுச் சேவையின் முன்னாள் பணிப்பாளர் சுரேஷ் சாலே, தான் முன்னெடுத்திருந்த உண்ணாவிரதப் 07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெங்கு கட்டுப்பாட்டில் அரசுக்கு படுதோல்வி!

## எதிர்க்கட்சிகள் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை. 02

டெங்கு கட்டுப்பாட்டில் அரசு தோல்வியடைந்துள்ளதாக எதிர்க் கட்சிகள் குற்றம்சாட்டியுள்ளன.

தற்போதைய அரசியல் நிலைமை தொடர்பாக கலந்துரையாடுவதற்காக முன்னாள் அமைச்சர் ஜி. எல். பீரிஸின் நாரஹேன்பிட்டி இல்லத்தில் பல்வேறு எதிர்க்கட்சித் தலைவர்கள் ஒன்றுகூடி விசேட கலந்துரையாடல் நடத்தினர்.

கூட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த எதிர்க்கட்சி அரசியல்வாதி பிரேமநாத் சி.தொலவத்த, எரிபொருள் விலை, டெங்கு பரவல், விவசாயிகள் எதிர்நோக்கும் நெருக்கடி மற்றும் நீதித்துறையின் சுயாதீனம் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் அரசை கடுமையாக விமர்சித்தார்.

நாட்டின் தற்போதைய அரசியல் மற்றும் பொருளாதார சூழ்நிலை குறித்து தொடர்ச்சியாக கலந்துரையாடி வருவதாக தெரிவித்த

பிரேமநாத் சி. தொலவத்த, முன்னதாக எரிபொருள் விலையை ரூபாய் 150 முதல் 200 வரை உயர்த்திவிட்டு, தற்போது ரூபாய் 20 மட்டுமே குறைத்து மக்களுக்கு நிவாரணம் வழங்கியதாக அரசு கூறுவது ஏற்றுக் கொள்ள முடியாதது என்றார்.

ஆசியா உள்ளிட்ட உலகின் பல நாடுகளில் எரிபொருள் விலைகள் கணிசமாகக் குறைக் கப்பட்டுள்ள நிலையில், அதே போன்ற நிவாரணத்தை இலங்கை மக்களுக்கும் வழங்க முடியும் என்றும், ஆனால் அரசாங்கம் அதனை செய்ய மறுப்பதாகவும் அவர் குற்றம்சாட்டினார்.

மேலும், தரமற்ற நிலக்கரி கொள்வனவில் ஏற்பட்ட சர்ச்சையை மறைப்பதற்காகவே அரசாங்கம் மக்கள்மீது தேவையற்ற பொருளாதாரச் சுமைகளை சுமத்தி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

டெங்கு பரவல் தொடர்பில் கருத்து வெளியிட்ட அவர், டெங்கு ஒழிப்பில் அரசாங்கம் தோல்வியடைந்துள்ளதாகவும், குப்பை முகாமைத்துவம் மற்றும் வடிகால் பராமரிப்பில் அலட்சியம் காரணமாக மக்களின் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகவும் கூறினார்.

விவசாயத் துறையைப் பற்றிக் கருத்து தெரிவித்த அவர், நாட்டில் அரிசி போதுமான அளவில் இருந்தபோதும் வெளிநாடுகளிலிருந்து தேவையற்ற இறக்குமதி மேற்கொள்ளப்படுவதால் உள்ளூர் நெல் விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டினார்.

# டெங்கு உயிரிழப்பு 32!

கொழும்பு, ஜூலை. 01

நாட்டில் இதுவரை டெங்கு நோயினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 32ஆக அதிகரித்துள்ளதுடன் நடப்பாண்டில் இதுவரை 55,406 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதென தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

நேற்று பகல் முடிவடைந்த கடந்த 24 மணித்தியாலங்களில் மட்டும் 1,024 புதிய தொற்றுகள் உறுதி செய்யப்பட்டுள்ளன.

ஜூன் மாதத்தில் மட்டும் 21,565 பேர் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களில் அதிகளவிலான நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

நுளம்புகள் பெருகும் இடங்களை உடனடியாக அகற்றி, பொதுமக்கள் விழிப்புடன் செயல்படுமாறு அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர். (அ)

# கியூ.ஆர். முறையை அரசு நீக்கவேண்டும்

## எரிபொருள் விலை குறைப்பு போதுமானதல்ல சுட்டிக்காட்டுகிறார் ரவி கருணாநாயக்க எம்.பி.

கொழும்பு, ஜூலை. 02

எரிபொருள்கள் தற்போது தட்டுப்பாடின்றி கிடைக்கப்பெறுவதால், கியூஆர் முறையை அரசாங்கம் நீக்க வேண்டும். அதேநேரம் உலக சந்தையில் குறைவடைந்திருக்கும் எரிபொருள்களின் கட்டணத்துடன் ஒப்பிடுகையில் எரிபொருள்களுக்கான விலை குறைப்பு போதுமானதல்ல என புதிய ஜனநாயக முன்னணி பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் நடத்திய விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பெற்றோல் மற்றும் டீசல் விலையை அரசாங்கம் குறைத்துள்ளது. ஒரு லீற்றர் பெற்றோல் 20 ரூபாவாலும் ஒரு லீற்றர் டீசல் 25 ரூபாவாலுமே குறைக்கப்பட்டிருக்கிறது. என்றாலும் உலக சந்தையில் தற்போது எரிபொருட்களின் விலை குறைவடைந்துள்ள வீதத்துடன் ஒப்பிட்டு பார்க்கையில் அரசாங்கத்தின் விலை குறைப்பு போதுமானதாக இல்லை. ஏனெனில் உலக சந்தையில் விலை அதிகரிக்கும் போதெல்லாம் எமது நாட்டிலும் அதற்கு நிகராக விலை அதிகரிக்கப்பட்டது. அதனால் தற்போது உலக சந்தையில் விலை குறைவடையும்போது அதற்கு நிகராக விலை குறைவடையவேண்டும். அதுதான் நியாயம். ஆனால் அவ்வாறு இடம்பெறவில்லை.

அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்துடன் செய்துகொண்டுள்ள ஒப்பந்தத்தின் பிரகாரம், தனது செலவுக்கு ஒதுப்போகக் கூடிய வகையிலே சந்தையில் எரிபொருள்களின் விலையை நிர்ணயிக்க வேண்டும். அந்த சந்தை விலை செலவுக்கு குறிப்பிட்டதொரு வீதம் சேர்த்தே ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. உண்மையில் எரிபொருள் கொள்வனவு செய்த விலை மற்றும் விற்பனை செய்யும் விலைக்கு மத்தியில் நட்டம் ஏற்படாத வகையில் விற்பனை செய்யுமாறே நாணய நிதியம் அரசாங்கத்துக்கு தெரிவித்திருக்கிறது.

அதனால் அரசாங்கம் தற்போது நாணய நிதியம் தெரிவித்துள்ளதான் பிரகாரம் செய்கிறதா இல்லையா? அவ்வாறு செய்யும் போது முறையற்ற இலாபம் பெற்றுக்கொள்ளவும் முடியாது. அதேநேரம் நட்டப்படவும் முடியாது. இதுதான் சரியான நிலைமை-என்றார். (அ)

# சிறப்புற நடைபெற்று முடிந்த வட இந்து மகளிர் பரிசளிப்பு



யாழ்ப்பாணம்

வடமராட்சி வட இந்து மகளிர் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழாவும் நிறுவுநர் தின நிகழ்வும் நேற்று முன் தினம் கல்லூரி அதிபர் கிருஷ்ணலதா குலசங்கர் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில், விருந்தினர்களுக்கு மலர் மாலை அணிவித்து விழா மண்டபத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டதுடன், மங்கல விளக்கேற்றத்துடன் நிகழ்வுகள் ஆரம்பமாகின.

வரவேற்பு நடனம், வரவேற்புரை மற்றும் தலைமை உரையைத் தொடர்ந்து, வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் லாவண்யா சுகந்தன் முதன்மை விருந்தினர் உரையை நிகழ்த்தினார்.

தொடர்ந்து கல்வி, விளையாட்டு, கலை மற்றும் இணைப்பாடச் செயல்பாடுகளில் சிறந்து விளங்கிய மாணவிகளுக்கு சான்றிதழ்கள், பதக்கங்கள் மற்றும் பரிசுகள் வழங்கப்பட்டன.

வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் லவண்யா சுகந்தன், யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் வடமராட்சி அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான ரஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி, கல்லூரியின் பழைய மாணவியும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விரிவுரையாளருமான மருத்துவ கலாநிதி மாதங்கி சூரியகாந்தன் ஆகியோர் மாணவிகளை கௌரவித்து விருதுகளை வழங்கினர்.

நிகழ்வில் ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர், நலன்விரும்பிகள் மற்றும் பிரதேச மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (அ)

# சுகீஸ்வர பண்டாரவுக்கு மீண்டும் விளக்கமறியல்

கொழும்பு, ஜூலை. 02

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் முன்னாள் தனிப்பட்ட செயலாளரும், புதிய மக்கள் முன்னணியின் தலைவருமான சுகீஸ்வர பண்டாரவை மீண்டும் விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் நேற்று முற்பகல் ஆஜர்படுத்தப்பட்டபோதே சுகீஷ்வர பண்டாரவை எதிர்வரும் ஜூலை 08ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதவான் உத்தரவு பிறப்பித்தார். (அ)

# சிறுபோக நெல்லுக்கு அரசால் உத்தரவாத விலை அறிவிப்பு!

கொழும்பு, ஜூலை. 02

சிறுபோகத்துக்காக அரசாங்கத்தினால் கொள்வனவு செய்யப்படும் நெல்லுக்கான உத்தரவாத விலைகளை வர்த்தக அமைச்சர் வசந்த சமரசிங்க அறிவித்துள்ளார்.

அதன்படி, பின்வரும் விலைகளின் கீழ் நெல் கொள்வனவு செய்யப்படும் என அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்:

நாடு நெல்-ஒரு கிலோகிராம் 120 ரூபாய்

சம்பா நெல்-ஒரு கிலோகிராம் 130 ரூபாய்

கீரி சம்பா நெல்-ஒரு கிலோகிராம் 140 ரூபாய்

அதேபோல், தற்போது கையிருப்பில் உள்ள அரிசியை நுகர்வோருக்கு மிக விரைவாக விநியோகிப்பதற்கான விசேட வேலைத்திட்டம் ஒன்றும் நடைமுறைப்படுத் தப்பட்டுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# வெளிநாட்டு சிகரெட்டுக்களுடன் சிக்கிய நான்கு சீன வர்த்தகர்கள்!

கொழும்பு, ஜூலை 02

1 கோடியே 8 இலட்சம் ரூபாய் பெறுமதியான வெளிநாட்டு தயாரிப்பு சிகரெட்டுக்களை சட்டவிரோதமான முறையில் நாட்டுக்குள் கடத்தி வர முயன்ற நான்கு சீன விமானப் பயணிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கட்டுநாயக்க விமான நிலையத்தின் வருகை முனையத்தில் உள்ள "பசுமை வழி" ஊடாக இந்த சிகரெட் தொகையை வெளியே கடத்திச் செல்ல முயன்ற போதே நேற்று அதிகாலை விமான நிலையச் சுங்க அதிகாரிகள் மற்றும் சுங்க போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவின் அதிகாரிகளால் இவர்கள் நால்வரும் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்கள் 35 வயது மதிக்கத்தக்க சீன நாட்டு வர்த்தகர்கள் எனத் தெரியவந்துள்ளது.

அவர்கள் நேற்று அதிகாலை 12.30 மணியளவில் தாய்லாந்தின் பாங்கொக் நகரிலிருந்து, தாய் எயார் வேஸ் நிறுவனத்துக்குச் சொந்தமான விமானம் மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர்.

இதன்போது, அவர்கள் கொண்டு வந்த 06 பயணப் பொதிகளுக்குள் சீனாவில் தயாரிக்கப்பட்ட 72,000 சிகரெட்டுக்களை உள்ளடக்கிய 360 சிகரெட் கார்ட்டூன்கள் மறைத்து வைக்கப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது. (அ)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu 02.07.2026 புதன்கிழமை
பராபவ வருடம், ஆனி 18

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

# தமிழ்நாட்டு அரசியல் கோலமாற்றங்கள்

தமிழ்நாடு முதலமைச்சர் ஜோசப் விஜய் பதவிக்கு வந்து இரு மாதங்கள் நிறைவடைவதற்கு சில நாட்கள் இருக்கின்றன. அவரின் ஆட்சி குறித்து பிரதான எதிர்க் கட்சிகளான திராவிட முன்னேற்றக் கழகமும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் பெரும்பாலும் கேலி செய்யும் தொனியிலான விமர்சனங்களையே முன்வைத்து வருகின்றன.

விஜய்யின் தமிழக வெற்றிக் கழகம் ஆட்சிக்கு வந்த பிறகு அரசியல் சக்திகளின் அணுகுமுறைகளும் செயற்பாடுகளும் மாநில அரசியலின் கோலத்தை மாற்றியமைத்துக் கொண்டிருக்கின்றன. கடந்த இரு மாதகால அரசியல் நிகழ்வுப் போக்குகளைப் பார்க்கும் போது நீண்டகாலமாக தி.மு.க. வுடன் கூட்டுச் சேர்ந்திருந்த கட்சிகளும் குழுக்களும் அந்த கூட்டில் இருந்து வெளியேறுவதற்கு வசதியான சந்தர்ப்பம் ஒன்றுக்காக ஆவலுடன் காத்திருந்னவோ என்று கேட்கவேண்டியிருக்கிறது.

தி.மு.க. வுடன் தேர்தலைச் சந்தித்த காங்கிரஸ், கம்யூனிஸ்ட் கட்சிகள், விடுதலை சிறுத்தைகள், இந்திய முஸ்லிம் லீக் போன்ற கட்சிகள் தமிழக வெற்றிக் கழக அரசாங்கத்தில் இணைந்து அமைச்சர் பதவிகளைப் பெற்றிருக்கின்றன. மறுமலர்ச்சி தி.மு.க.வின் தலைவர் வைகோ அரசாங்கத்தை ஆதரிக்கும் கட்சிகளை ஒருங்கிணைத்து பலப்படுத்தும் செயற்பாடுகளில் இறங்கியிருக்கிறார்.

இனிமேல் நடைபெறக்கூடிய இடைத்தேர்தல்களிலும் வேறு தேர்தல்களிலும் கூட்டணிகளில் பாரிய மாற்றங்களை நிச்சயம் காணக்கூடியதாக இருக்கும். இது வரையில் திராவிட இயக்கத்தின் இரு பிரதான கட்சிகளுடனும் கூட்டுச் சேர்ந்து போட்டியிடுவதை தவிர, வேறு மார்க்கம் இல்லாமல் இருந்த கட்சிகளுக்கு இன்னொரு பலம் பொருந்திய மாற்றாக விஜய்யின் கட்சி வந்துவிட்டது. தி.மு.க. பெரும்பாலும் தனித்துப் போட்டியிடும் நிலைக்குத் தள்ளப்படும் சாத்தியம் இருக்கிறது.

சட்டசபைத் தேர்தல் பிரசாரங்களின்போது விஜய் அண்ணா தி.மு க.வை பெரிதாகத் தாக்கிப் பேசவில்லை. தி.மு.க.வை அரசியலில் இருந்து அகற்றப்பட வேண்டிய "தீயசக்தி " என்று கடுமையான விமர்சனத்தை அவர் முன்வைத்தார். ஆனால், தேர்தல் முடிவடைந்து விஜய் ஆட்சிக்கு வந்த பிறகு அரசியல் ரீதியில் பெரும் பாதிப்புக்கு உள்ளாகிவருவது அந்த "தீயசக்தி" அல்ல, மாறாக முன்னாள் முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி தலைமையிலான அண்ணா தி.மு.க. வாகவே இருக்கிறது.

அண்ணா தி.மு.க.வில் இருந்து சட்டசபை உறுப்பினர்கள் தொடர்ச்சியாக பதவிவிலகி விஜய் கட்சியில் இணைந்து வருகிறார்கள். அண்ணா தி.மு க.வில் தங்களது பிராந்தியங்களில் செல்வாக்கு மிகுந்தவர்களாக இருந்த பல முக்கிய இரண்டாம் நிலைத் தலைவர்கள் தமிழக வெற்றிக் கழகத்தில் இணைந்து கொண்டிருக்கிறார்கள். அண்ணா தி.மு.க.வின் தாபகத் தலைவர் எம்.ஜி. ஆரையோ அல்லது அவருக்கு பிறகு அந்த கட்சியை பலம் பொருந்திய அரசியல் சக்தியாக கட்டியெழுப்பிய ஜெயலலிதாவையோ போன்று பழனிச்சாமி ஒன்றும் மக்கள் வசீகரமிக்க பிரமாண்டமான ஒரு அரசியல் ஆளுமை அல்ல. உறுப்பினர்களின் வெளியேற்றத்தை தடுக்க முடியாதவராக அவர் இருக்கிறார்.

அண்ணா தி.மு.க.வைச் சேர்ந்த அரசியல்வாதிகளும்தொண்டர்களும் அரை நூற்றாண்டுக்கும் அதிகமான காலமாக மாபெரும் சினிமா –. அரசியல் ஆளுமைகளான எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா இருவரினதும் நிழலில் வாழ்ந்தவர்கள். அத்தகைய ஆளுமைகள் இல்லாமல் பழனிச்சாமி போன்ற ஒருவரின் தலைமையில் மீண்டும் தங்களது கட்சியினால் ஆட்சிக்கு வரமுடியாது என்று அவர்கள் நம்பிக்கை இழந்திருக்கிறார்கள். தங்களது அரசியல் எதிர்காலத்தை உறுதி செய்வதற்காக அவர்கள் நீண்டகாலத்துக்கு பிறகு மாநில அரசியலில் மற்றொரு சினிமா - அரசியல் ஆளுமையாக வெளிக்கிளம்பி குறுகிய காலத்திற்குள் ஆட்சியைக் கைப்பற்றிய விஜய்யையும் அவரது தமிழக வெற்றிக் கழகத்தையும் அவர்கள் நம்பிக்கை நட்சத்திரமாக நோக்குகிறார்கள். அதன் விளைவே தற்போது இடம்பெற்றுவரும் வெளியேற்றமாகும்.

விஜய்யைப் பொறுத்தவரையிலும் கூட, பாரம்பரியமாக தி.மு.க.வுக்கும் கருணாநிதி குடும்பத்துக்கும் எதிரான வலிமையான உணர்வுகளைக் கொண்ட அண்ணா தி.மு.க.வின் தலைவர்களையும் தொண்டர்களையும் தனது கட்சியை பலப்படுத்துவதற்கான வளமான சக்திகளாக நோக்குகிறார். இன்றைய தமிழக அரசியல் கோலங்கள் எம்.ஜி.ஆர். 54 வருடங்களுக்கு முன்னர் ஆரம்பித்து மாநிலத்தின் மக்கள் ஆதரவுடைய பலம்பொருந்திய அரசியல் கட்சியின் எதிர்காலத்தைக் கேள்விக் குறியாக்குகின்றன.

# அரசியல்வாதிகளும் ஊடகங்களும்; காதலும் வெறுப்பும் கலந்த ஒரு உறவு



கடந்த வாரம் பாராளுமன்றத்தில் ஜனாதிபதி அநுர குமார திசநாயக்க தனது வழக்கமாகிப்போன மாதாந்த உரையை நிகழ்த்திய போது, "ஊடகங்கள் தாங்கள் இருக்கும் குப்பை மேட்டிலிருந்து வெளியே வராவிட்டால், அவர்களால் பிழைக்க முடியாது" என்று கூறினார்.

ஒரு நாட்டின் தலைவரிடமிருந்து என்னவொரு வார்த்தைப் பிரயோகம்!

ஜனாதிபதி திசநாயக்க, தான் ஜனாதிபதியாவதற்கான பயணத்தைத் தொடங்கியபோது, அவரது தேர்தல் வாக்குறுதிகளை நாடு முழுவதும் உள்ள மக்களுக்குக் கொண்டுபோய்ச் சேர்க்க இந்த ஊடகங்கள்தான் உதவின என்பதை அவர் மறந்துவிட்டார்.

அவர் தனது ஊழல் எதிர்ப்பு வாக்குறுதிகளை வழங்குவதற்கும் ஒரு புதிய ஆட்சிமுறை மாற்றத்தைக் கொண்டுவர விரும்பியபோதும் அவருக்குப் பக்கபலமாக நின்று, ஒரு நியாயமான தளத்தை வழங்கியது இதே ஊடகங்கள்தான்.

இப்போது ஜனாதிபதி அந்தப் பதவியில் அமர்ந்து விட்டதால், தனது அரசாங்கத்திற்கு எதிராக விடயங்கள் தவறாக நடக்கும்போது வரும் விமர்சனங்களைப் படிக்கவும் கேட்கவும் திசநாயக்க தயாராக இருக்க வேண்டும். நிச்சயமாக, சில ஊடகவியலாளர்கள் ஏதோ ஒரு உள்நோக்கத்துடனும் அரசாங்கத்தையும் நாட்டையும் சீர்குலைக்க விரும்பும் தரப்பினரின் நிதி உதவியுடனும் செயல்படுகிறார்கள் என்ற அவரது கருத்தை மறுதலிக்க முடியாது.

ஆனால், ஒட்டுமொத்த ஊடகத்துறையுமே குப்பை மேட்டில் இருக்கிறது என்று கூறுவது, எல்லாவற்றையும் வித்தியாசமாகச் செய்வதாக உறுதியளித்த ஒரு நாட்டின் தலைவரிடமிருந்து கேட்க வெட்கக் கேடானது.

ஆனால், ஊடகங்களுடன் ஒரு காதலும் வெறுப்பும் கலந்த் உறவைப் பேணி வரும் ஒரே ஜனாதிபதி அநுர குமார திசநாயக்க மட்டுமல்ல. கடந்த காலங்களிலும் ஜனாதிபதிகள் தங்கள் அரசாங்கங்களுக்கு எதிராகச் செய்தி வெளியிடுவதற்காக ஊடகங்களைக் கடுமையாகச் சாடியுள்ளனர்.

மேலும் ஊடக சந்திப்புகளில் ஊடகவியலாளர்களைத் தனிப்பட்ட முறையில் அவமதித்தும் உள்ளனர்.

ஒரு கதை நினைவுக்கு வருகிறது. சில ஆண்டுகளுக்கு முன்பு, ஒரு முன்னாள் அரசியல்வாதி பொதுத் தேர்தலில் தனது கட்சிக்காகவும் தனக்காகவும் தீவிரமாகப் பிரச்சாரம் செய்து கொண்டிருந்தபோது, அவரிடம் நேர்காணலைப் பெறுவதற்காக அவரது அலுவலகத்திலிருந்து பலமுறை தொலைபேசி அழைப்புகள் வந்தன.

அனைவருக்கும் குரல் கொடுக்க வேண்டும் என்ற எங்களது கொள்கைகளில் நாங்கள் உறுதியாக இருந்ததால், அவர் மக்களைச் சென்றடைவதற்காக அவரது கருத்துக்கள் பலமுறை ஒலிபரப்பப்பட்டு எழுதப்பட்டன. இருப்பினும், அவரது கட்சி வெற்றியைப் பெற்ற பிறகு, அலரி மாளிகையில் நான் அவரைச் சந்தித்த போது, ஊடகங்களுடன் பேசுவதே ஒரு சுமை என்பது போல அவர் ஊடகங்களை அலட்சியப்படுத்தினார்.

அவரது பதவியேற்பு விழாவைச் செய்தி சேகரிப்பதற்காக அவரது குழுவினரால் ஊடகங்கள் மரியாதையுடன் அழைக்கப்பட்டன, ஆனால் தேர்தல் முடிந்த உடனேயே அவர் மீண்டும் ஊடகங்களை அலட்சியப்படுத்தத் தொடங்கிவிட்டார்.

சரி, இதுதான் இந்த நாட்டில் உள்ள அனைத்து அரசியல்வாதிகளின் அவல நிலை. எனக்கு நினைவிருக்கும் காலத்திலிருந்தே, அரசியல்வாதிகள் அவர்கள் மூத்தவர்களாக இருந்தாலும் சரி அல்லது இளையவர்களாக இருந்தாலும் சரிதங்களை வெற்றி பெறச் செய்ய பிரார்த்தனை செய்யப்பட வேண்டிய கடவுள்களைப் போல ஊடகங்களை வழிபடும் ஒரே காலம் தேர்தல் காலம் மட்டும்தான்.

வழக்கமாக தொலைபேசி அழைப்புகளுக்குக் கூட பதிலளிக்காத அரசியல்வாதிகள், தேர்தல் நெருங்கும்போது அற்புதமாக ஊடகவியலாளர்களின் அனைத்து அழைப்புகளுக்கும் பதிலளிப்பார்கள்.

அரசியல்வாதிகளும் ஊடகவியலாளர்களும் ஒருவரையொருவர் சார்ந்து இல்லாமல் வாழ முடியாது என்பது பல வருடங்களாக நம்பப்படும் மற்றும் புரிந்து கொள்ளப்பட்ட ஒரு உண்மையாகும். களத்தில் நிலைத்து நிற்கவும் தங்களை முக்கியத்துவப்படுத்திக் கொள்ளவும் இரு தரப்பினருக்கும் ஒருவர் மற்றவர் தேவைப்படுகிறார்கள். இருவருமே குப்பை மேட்டில் இல்லை.

ஆனால், ஒவ்வொருவரும் தங்கள் தொழிலைச் செய்வதால் மட்டுமே இதைச் செய்கிறார்கள்.

நிச்சயமாக, தங்கள் தொழிலுக்கு உண்மையாக இருப்பதை விட பணத்திற்கு உண்மையாக இருந்து, இந்தத் தொழிலுக்கே அவமானமாக இருக்கும் சில ஊடகவியலாளர்களும் இருக்கிறார்கள். இதனால்தான் அனைத்து ஊடகவியலாளர்களும் பெரும்பாலும் "ஏதோ ஒரு உள்நோக்கத்துடன் எழுதுபவர்கள்" என்று முத்திரை குத்தப்படுகிறார்கள்.

ஊடகவியலாளர்களும் பேனாவைக் கையில் எடுத்தவுடன், எவ்வளவு கடினமாக இருந்தாலும் உண்மைக்கு முன்னால் நிற்போம் என்று சத்தியப்பிரமாணம் செய்திருக்கிறோம் என்பதை அறிந்து கொள்ள வேண்டும். உண்மையை எத்தனையோ அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் பாதுகாத்து, அம்பலப்படுத்துவதற்காகத் தங்கள் உயிரைத் தியாகம் செய்த, மற்றும் உடல் ரீதியாகப் பாதிக்கப்பட்ட சில துணிச்சலான ஊடகவியலாளர்களின் பெயர்களை இலங்கை சுமந்து நிற்கிறது.

தவறு செய்பவர்களை இது கோபப்படுத்துவதால், எல்லாராலும் இந்தத் துறையில் தப்பிப்பிழைக்க முடியாது.

ஆனால், நாம் இந்தத் துறையில் இறங்கும் போது, இது நமது உயிரை விட மதிப்புமிக்க ஒரு தொழிலாக மாறுகிறது. ஏனெனில், உண்மையை அறிந்துகொள்ளவும், தங்கள் அரசாங்கங்களைப் பொறுப்புடன் தேர்ந்தெடுக்கவும் தகுதியுடைய மக்களுக்கு நாம் சேவை செய்கிறோம்.

அனைத்து ஊடகவியலாளர்களும் குப்பை மேட்டில் இல்லை. அனைத்து ஊடகவியலாளர்களும் யாரிடமும் பணம் வாங்கிக் கொண்டு லேலை செய்வோர் பட்டியலில் இல்லை. அனைத்து ஊடகவியலாளர்களும் புவிசார் அரசியல் அழுத்தங்களுக்குப் பணிந்து போவதில்லை. இன்றும் கூட தங்கள் அலுவலகங்களுக்குள் நுழைந்து உண்மையை எழுதுவதற்காகக் கடுமையாக உழைப்பவர்கள் சிலர் இருக்கிறார்கள்.

அதேபோல், இன்றும் கூட நாட்டிற்காகவும் மக்களுக்காகவும் நேர்மையாக உழைக்கும் சில அரசியல்வாதிகளும் இருக்கிறார்கள். இந்த நாட்டை அனைவருக்கும் சிறந்த இடமாக மாற்றுவோம் என்ற தங்கள் வார்த்தைக்கு அவர்கள் உண்மையாக நிற்கிறார்கள்.

அரசியல்வாதிகள் மற்றும் ஊடகவியலாளர்கள் இருவருமே மக்கள் சார்பில் தாங்கள் கொண்டிருக்கும் அதிகாரத்தை உணர்ந்து கொள்ள வேண்டிய நேரம் இது.

**(டெயிலி மிறர் ஆசிரிய தலையங்கம், 1 ஜூலை 2026)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஜூலை - 02 வியாழக்கிழமை
பராபவ வருடம் - ஆனி 18
நல்ல நேரம் : 10.30 - 12.30
ராகு காலம் : 01.30 - 03.00
திதி : திரிதியை




**மேடம்**
கணவன்- மனைவிக்குள் மனம் விட்டு பேசுங்கள். புது முடிவுகள் எடுப்பீர்கள். உடல் நிலை சீராகும். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் வரும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள்.

**இடபம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் ஒரு விஷயத்தை நினைத்து அதிகளவில் குழப்பம் அடைவீர்கள். வியாபாரத்தில் புது முதலீடுகளை தவிர்க்கவும். சக ஊழியர்களை உதாசீனப்படுத்த வேண்டாம்.

**மிதுனம்**
சகோதர வகையில் நன்மை உண்டு. விலை உயர்ந்த ஆபரணம் வாங்குவீர்கள். மனைவி வழியில் மதிக்கப்படுவீர்கள். தலைமையின் ஆதரவு கிட்டும். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**கடகம்**
குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். உத்தியோகத்தில் சின்னச் சின்ன சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள். தொட்டது துலங்கும் நாள்.

**சிம்மம்**
வருங்காலத் திட்டத்தில் ஒன்று நிறைவேறும். பிள்ளைகளின் தனித்திறமைகளை கண்டறிவீர்கள். உத்தியோகத்தில் உங்களின் ஆலோசனை ஏற்கப்படும். கனவு நனவாகும் நாள்.

**கன்னி**
கடந்த கால இனிய அனுபவங்களை நினைவுக்கூர்ந்து மகிழ்வீர்கள். உத்தியோகத்தில் சூழ்ச்சிகளைத் தாண்டி முன்னேறுவீர்கள். எதிர்பாராத நன்மைகள் உண்டாகும் நாள்.

**துலாம்**
குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளை புரிந்துக் கொண்டு அதற்கேற்ப உங்களை மாற்றிக் கொள்வீர்கள். உத்தியோ கத்தில் அதிகாரிகளுக்கு நெருக்கமாவீர்கள். தைரியம் கூடும் நாள்.

**விருட்சிகம்**
குடும்பத்தில் கலகலப்பான சூழல் உருவாகும். சில வேலைகளை விட்டுக் கொடுத்து முடிப்பீர்கள். வியாபாரத்தில் லாபம் உண்டு. உத்தியோகத்தில் மேலதிகாரி ஒத்துழைப்பார். மகிழ்ச்சி தொடங்கும் நாள்.

**தனுசு**
ராசிக்குள் சந்திரன் நீடிப்பதால் சந்தேகப்படுவதை முதலில் நிறுத்துங்கள். வியாபாரத்தில் இழப்புகள் ஏற்படும். உத்தியோகத்தில் மறைமுக அவமானம் வந்து நீங்கும். பொறுமைத் தேவைப்படும் நாள்.

**மகரம்**
அனாவசிய செலவுகளை குறைக்கப்பாருங்கள். திடீர் பயணங்கள் இருக்கும். வியாபாரத்தில் பழைய பாக்கிகளை வசூலிப்பீர்கள். வேலைச்சுமையால் சோர்வு அடைவீர்கள். அலைச்சலுடன் ஆதாயம் தரும்.

**கும்பம்**
எதார்த்தமாக பேசிக் கவர்வீர்கள். பெற்றோரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தில் விஐபிகள் வாடிக்கையாளர் ஆவார்கள். சக ஊழியர்கள் பாராட்டுவார்கள். புகழ் கௌரவம் கூடும்.

**மீனம்**
நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறைவேறும். சிலர் உங்களை நம்பி முக்கிய பொறுப்புகளை ஒப்படைப்பார்கள். வியாபாரத்தில் புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். மரியாதை கூடும். முயற்சிகள்பலிதமாகும்

# திணைக்கள மட்டங்களில் பகல்நேர குழந்தை பராமரிப்பு நிலையங்கள்!

## அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் யோசனை

யாழ்ப்பாணம், ஜூலை. 02

வேலைக்குச் செல்லும் பெண்களின் வசதிக்காகத் திணைக்கள மட்டங்களில் பகல்நேரக் குழந்தை பராமரிப்பு நிலையங்கள் மற்றும் முதியோர் காப்பகங்கள் உருவாக்கப்படவேண்டியது அவசியமாகும் என மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் கலாசார மண்டபத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற மகளிர் தின நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

யாழ்ப்பாண மண்ணின் பெருமையானது இம்மண்ணின் பெண்களின் அளப்பரிய துணிவிலேயே தங்கியுள்ளது.

"பெண் தொழில்முனைவோர்கள் பொருளாதார ரீதியாக வலுவூட்டப்படும்போதே அவர்களின் வாழ்க்கைத்தரம் உயரும். இதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுத்துள்ளது.

ஆண்கள் மற்றும் பெண்கள் இருபாலாரும் ஒரே வேலையைச் செய்தாலும், இருவருக்கும் சமமான ஊதியம் கிடைக்கின்றதா என்றால், இன்றும் இல்லை என்றே கூறவேண்டும்.




அரச நிறுவனங்களில் கூடப் பணிபுரியும் பெண்களின் குடும்பச் சூழல் குறித்துச் சிந்திக்கப்படுவதில்லை. எனவே, வேலைக்குச் செல்லும் பெண்களின் வசதிக்காகத் திணைக்கள மட்டங்களில் பகல்நேரக் குழந்தைப் பராமரிப்பு நிலையங்கள் மற்றும் முதியோர் காப்பகங்கள் உருவாக்கப்பட வேண்டியது அவசியமாகும்.

அத்துடன், குடும்ப வன்முறைகளால் பாதிக்கப்படும் பெண்களுக்காக ஒவ்வொரு மாவட்டத்திலும் பிரத்தியேகப் பாதுகாப்பு இல்லங்கள் அமைக்கப்பட வேண்டும்-என்றார்.

(அ)

# வருமானத்துக்காக சமூக ஊடகங்களில் பெண்களை இழிவுபடுத்தும் செயற்பாடு!

## இளங்குமரன் எம்.பி. கவலை

யாழ்ப்பாணம், ஜூலை. 02

சமூக ஊடகங்களில் வருமானத்துக்காக பெண்களை இழிவுபடுத்தி பிழையான கருத்துக்களைப் பரப்புவதால், பெண்கள் பாதிப்படைகின்றனர். அதனால் அது தொடர்பில் விரைவான நடவடிக்கை எடுக்கவேண்டும் என தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் க. இளங்குமரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் கலாசார மண்டபத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற மகளிர் தின நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டுக்குப் பெருமளவு அந்நியச் செலாவணியை ஈட்டித் தருபவர்களாகப் பெண்களே திகழ்கின்றனர்.

மலையகத் தோட்டத் தொழிலாளர்கள், ஆடைத் தொழிற்சாலைப் பணியாளர்கள் மற்றும் மத்திய கிழக்கு நாடுகளுக்குச் சென்று உழைப்பவர்கள் எனப் பல வழிகளிலும் பெண்களின் பங்களிப்பு அளப்பரியது.

தற்காலத்தில் சமூக ஊடகங்கள் வருமான நோக்கத்துக்காகப் பிழையான கருத்துக்களைப் பரப்பி வருவதால் பெண்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர், இவ்வாறான செயற்பாடுகள் உடனடியாகத் தடுத்து நிறுத்தப்பட்டு, ஒழுங்குமுறைப்படுத்தப்பட வேண்டும்-என்றார்.

(அ)

# திருமந்திரச் சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஜூலை. 02

தெல்லிப்பளை மாவை கலட்டி அருள்மிகு நாகதம்பிரான் தேவஸ்தானத்தில்சைவ வாழ்வியலில் திருமந்திரம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் நடத்தும் வாராந்தத் திருமந்திரச் சிறப்புச் சொற்பொழிவுத் தொடர் நாளை வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

திருமூல நாயனார் குருபூஜையை அடுத்து மாணவர்களின் கலை நிகழ்வும், திருவாசகப்பிரியன், சொற்பெருவேந்தர் செ. த. குமரனின் "கொல்வாமையே சிறந்த அறம்" என்னும் சொற்பொழிவும் இடம்பெறும்.

சொற்பொழிவில் இருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளது.

# 135 குடும்பங்களுக்கு உதவி!

வடமராட்சி, ஜூலை. 02

யாழ். மாவட்டத்தின் பல பகுதிகளிலும் தெரிவு செய்யப்பட்ட பொருளாதாரத்தால் பாதிக்கப்பட்ட 135 குடும்பங்களுக்கு 3 இலட்சத்து 71 ஆயிரம் ரூபா பெறுமதியான அத்தியவசியமான உணவுப் பொருளான அரிசிப் பொதிகள் வழங்கப்பட்டன.

குடும்ப அங்கத்தவர்களுக்கு ஏற்ப 15 கிலோ, 12 கிலோ, 10 கிலோ, 07 கிலோ என்ற அடிப்படையில் இவை வழங்கப்பட்டன.

இவ் உதவித் திட்டத்தை சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் சாதனைத் தமிழன் செ.மோகனதாஸ் சுவாமிகள் ஆச்சிரமத்தில் வைத்து வழங்கினார்.

இவ்வாறான உதவித் திட்டம் மாதாந்தம் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-02)

# பயணிகள் நிழற்குடை திறப்பு

வடமராட்சி, ஜூலை. 02

அமரர் தவமணிதேவி சதாசிவம் ஞாபகார்த்த பயணிகள் நிழற்குடை நாகர்கோவில் நாகதம்பிரான் ஆலயம் அருகாமையில் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், இலங்கை தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளருமான எம்.ஏ.சுமந்திரன் இதனைத் திறந்து வைத்தார்.

அமரர் தவமணிதேவி சதாசிவத்தின் மருமகனான பருத்தித்துறை நகரசபை உறுப்பினர் சட்டத்தரணி திருஞானசம்மந்தன் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இதில் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் சந்திரலிங்கம் சுகிர்தன், பருத்தித்துறை பிரதேச சபை உப தவிசாளர் காந்தரூபன், பருத்தித்துறை நகர சபை உப தவிசாளர் தேவராஜேந்திரன், உறுப்பினர்களான ரஞ்சுன், நிமலேந்திரன், அனல் ரெஜி, பருத்தித்துறை பிரதேச சபை முன்னாள் தவிசாளர் பூபாலசிங்கம் சஞ்சீவன் மற்றும் அமரர் தவமணிதேவி சதாசிவத்தின் உறவினர்கள் என பலரும் கலந்துகொண்டனர். (அ-02)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



சுரேஷ் சாலே விவகாரம் உட்பட

# அனைத்து விசாரணைகளும் சுயாதீனமாக நடக்கின்றன!

## அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ

கொழும்பு, ஜூலை. 02

முன்னாள் நீதி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷவின் மகன் உள்ளிட்டோர் 12 கோடி ரூபா இலஞ்சம் பெற்றதாகக் கூறப்படும் குற்றச்சாட்டின் அடிப்படையில் கைது செய்யப்பட்டுள்ளமை மற்றும் சுரேஷ் சாலேயின் விவகாரம் தொடர்பான அனைத்து விசாரணைகளும் சட்டத்தின் ஆட்சியை உறுதிப்படுத்தும் வகையில், எந்தவித அரசியல் தலையீடும் இன்றி சுயாதீனமாகவும், துரிதமாகவும் முன்னெடுக்கப்பட்டு வருவதாக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

விஜேதாஸ ராஜபக்ஷவின் மகன் உள்ளிட்டோர் கைது செய்யப்பட்டுள்ளமை மற்றும் மற்றும் சுரேஷ் சாலேயின் விவகாரம் தொடர்பான விசாரணைகளின் முன்னேற்றம் குறித்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்த விசாரணைகளின் உள்ளகத் தகவல்கள் ஊடகங்களுக்குத் தெரியவராமல் இருக்கலாம். ஆனால், விசாரணைகளின் முன்னேற்றங்கள் அனைத்தும் நீதிமன்றத்துக்கு முறையாக அறிக்கை செய்யப்படுகின்றன. அப்போது பொதுமக்களுக்கு உண்மை நிலைமையைத் தெரிந்துகொள்ள முடியும்.

இவ்விசாரணைகள் சரியாக நடக்கிறதா இல்லையா என்பதைப் பார்ப்பதற்கான சிறந்த அளவுகோள் என்னவென்றால், குற்றச்சாட்டுக்கு உள்ளானவர்களின் நடத்தையும் அவர்களின் பதற்றமும்தான். அவர்கள் எந்தளவுக்கு பதற்றமடைகிறார்களோ, அந்தளவுக்கு விசாரணைகள் சரியான பாதையில் நகர்கின்றன என்று அர்த்தம்.

மேலும், இப்போது ஒரு புதிய கலாசாரம் நாட்டில் உருவாகியுள்ளது. சந்தேக நபர்களே தங்களுக்கு இந்த விசாரணை அதிகாரிதான் வேண்டும் என்றும், குறிப்பிட்ட அதிகாரியை மாற்றவேண்டும் என்றும் நிபந்தனை விதிக்கிறார்கள். அவ்வாறான கோரிக்கைகளுக்கு ஒருபோதும் இடம் வழங்கப்பட மாட்டாது.

பொலிஸ், குற்றப்புலனாய்வுப் பிரிவு, இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு போன்றவற்றில் தகுதியான அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் தங்களது பணிகளைச் சுயாதீனமாகச் செய்கிறார்கள். சந்தேக நபர்களின் விருப்பப்படி புலனாய்வு அதிகாரிகளை நியமிக்க முடியாது.

சுரேஷ் சாலேயின் ஆரோக்கியப் பிரச்னைகள் குறித்தும் கொழும்பு தேசிய மருத்துவமனையின் விசேட நிபுணத்துவ மருத்துவர்கள் தொடர்ச்சியாகக் கண்காணித்து, அவதானம் செலுத்தி வருகின்றனர்-என்றார்.

# எரிபொருள் விலை குறைப்பின் பலனை அரசு நாட்டு மக்களுக்கு வழங்கவில்லை!

## சம்பிக்க ரணவக்க குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை. 02

எரிபொருள் விலை சூத்திர நிர்ணயத்தை அரசாங்கம் வெளிப்படுத்தவேண்டும். உலக சந்தையில் எரிபொருள் விலை குறைவடைந்துள்ள நிலையில் அதன் முழு பயனையும் அரசாங்கம் நாட்டு மக்களுக்கு வழங்கவில்லை என ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவரும், முன்னாள் அமைச்சருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

நிலக்கரி இறக்குமதி தொடர்பில் ஆராயும் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவில் முன்னிலையாகி சாட்சியமளித்ததன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது-

நிலக்கரி இறக்குமதியில் இடம்பெற்றுள்ள ஊழல் மோசடி தொடர்பில் ஆணைக்குழுவில் முன்னிலையாகி சாட்சியமளித்தேன். இந்த அரசாங்கத்தில் இடம்பெற்ற நிலக்கரி இறக்குமதி மோசடி தொடர்பில் விடயங்களை குற்றச்சாட்டுக்களை முன்வைத்தபோது அரசாங்கம் கடந்த கால அரசாங்கங்களையும் குற்றவாளியாக்குவதற்கு முயற்சிக்கிறது.

2025 மற்றும் 2026ஆம் ஆண்டுக்காக கொள்வனவு செய்யப்பட்ட நிலக்கரி இறக்குமதி செய்யப்பட்டபோது மோசடி இடம்பெற்றுள்ளதை தேசிய கணக்காய்வாளர் நாயகம் அலுவலகமும், பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவும் உறுதிப்படுத்தியுள்ளது.

நிலக்கரி கொள்வனவில் இடம்பெற்ற மோசடி தொடர்பில் முன்னாள் வலுசக்தி அமைச்சர் குமார ஜயக்கொடிக்கு எதிராக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. ஆனால் அது குறித்து எவ்வித விசாரணைகளும் இதுவரையில் முன்னெடுக்கப்படவில்லை.

சிங்கப்பூர் நாட்டின் விலைச் சுட்டெண்ணுக்கு அமைவாகவே எரிபொருள் விலையை தீர்மானிப்பதாக அரசாங்கம் குறிப்பிடுகிறது. அவ்வாறாயின் தற்போது ஒரு லீற்றர் பெற்றோலை 220 ரூபாவுக்கும், ஒரு லீற்றர் டீசலை 230 ரூபாவுக்கும் வழங்கவேண்டும்-என்றார். (அ)

நீதியரசர்களின் ஓய்வு பெறும் வயது நீடிப்பு:

# பொதுமக்கள் கருத்து கேட்பதற்கு சட்டத்தரணிகள் சங்கம் தீர்மானம்

கொழும்பு, ஜூலை. 02

உயர் நீதிமன்ற மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களின் ஓய்வுபெறும் வயதை நீடிப்பது குறித்து பொதுமக்களின் கருத்துக்களைக் கேட்டறிய இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தீர்மானித்துள்ளது.

இதற்கமைய, எதிர்வரும் 4ஆம் திகதி இந்த வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தவுள்ளதாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

உயர் நீதிமன்ற மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களின் ஓய்வுபெறும் வயதை நீடிப்பதற்கான அரசாங்கத்தின் முன்மொழிவு குறித்து கலந்துரையாடுவதற்காக இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் செயற்குழு அண்மையில் கூடியிருந்தது.

இதன்போது, குறித்த முன்மொழிவை நடைமுறைப்படுத்த வேண்டாம் என ஜனாதிபதியிடம் எழுத்துப்பூர்வமாக கோரிக்கை விடுக்க தீர்மானிக்கப்பட்டதுடன், இது குறித்து பொதுமக்களின் கருத்துக்களைப் பெற்றுக் கொள்வதற்கும் முன்மொழியப்பட்டது.

இதன்படி, எதிர்வரும் 4ஆம் திகதி இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் சட்டத்தரணிகள் சபை கூட்டத்தின் பின்னர், குறித்த பொதுமக்களின் கருத்துக்களைப் பெற்றுக்கொள்ளும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இதேவேளை, உயர் நீதிமன்ற மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களின் ஓய்வுபெறும் வயதை நீடிக்கும் முன்மொழிவு குறித்து கலந்துரையாடுவதற்காக நீதிச் சேவைச் சங்கமும் பொது சபைக் கூட்டத்தைக் கூட்டுவதற்குத் தீர்மானித்துள்ளது.

# பௌத்த துறவிகளுக்கு என்று விசேட நீதிமன்றம் வேண்டும்!

## பலாங்கொடை கஸ்ஸப்ப தேரர் கோரிக்கை

கொழும்பு, ஜூலை. 02

இலங்கையில் பௌத்த துறவிகள் எதிர்கொள்ளும் ஒழுக்க நெறி, ஒழுக்கக் கோவை மீறல்கள் மற்றும் சிவில் பிரச்னைகளை கையாள்வதற்கும், அவர்களின் உன்னத நிலையைப் பாதுகாப்பதற்கும் என பிரத்தியேகமான விசேட பௌத்த நீதிமன்ற கட்டமைப்பு ஒன்று உடனடியாக உருவாக்கப்பட வேண்டும் என பலாங்கொடை கஸ்ஸப்ப தேரர் வலியுறுத்தியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கையின் அரசியலமைப்பின் பிரகாரம் பௌத்த சாசனத்தைப் பாதுகாப்பது அரசாங்கத்தின் முதன்மையான கடமையாகும். துறவிகளின் கௌரவத்தைப் பாதுகாக்கும் வகையில் தனித்துவமான விசேட நீதிமன்ற கட்டமைப்பு ஒன்று உருவாக்கப்பட வேண்டும்.

1815 ஆம் ஆண்டு கண்டி ஒப்பந்தத்தின் 5ஆவது பிரிவின் கீழ் பௌத்த மதத்தைப் பாதுகாக்கும் பொறுப்பு அக்கால அரசுகளுக்கு வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து 1978 ஆம் ஆண்டு குடியரசு அரசியலமைப்பின் 2 ஆம் அத்தியாயத்தின் 9 ஆவது பிரிவின் பிரகாரம், இலங்கையில் பௌத்த மதத்திற்கு முதன்மையான இடம் வழங்கப்படவேண்டும் என்பதுடன், பௌத்த சாசனத்தைப் பாதுகாத்து வளர்ப்பது அரசாங்கத்தின் தவிர்க்க முடியாத கடமையாகும் என்று தெளிவாக எழுதப்பட்டுள்ளது.

ஒழுக்கநெறிப் பிரச்சினைகளைத் தீர்க்க, இதுவரை ஒரு விசேட நீதிமன்ற கட்டமைப்பு உருவாக்கப்படவில்லை என்பது பெரும் வரலாற்றுத் துரோகமும் குறைபாடு ஆகும்-என்றார். (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# டெங்கு நோயிலிருந்து திருகோணமலையை பாதுகாப்பதற்கு ஒருங்கிணைந்த நடவடிக்கை

திருமலை, ஜூலை. 02

டெங்கு பணிக்குழுக் கூட்டம் பிரதி அமைச்சர் மற்றும் திருகோணமலை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் அருண் ஹேமச்சந்திரா தலைமையில் திருகோணமலை மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

இக்கூட்டம் மாவட்ட செயலாளர், மேலதிக மாவட்டச் செயலாளர்கள் மற்றும் சுகாதாரத் துறை, உள்ளூராட்சி மன்றங்கள், பொது நிர்வாக அதிகாரிகள், பாதுகாப்புப் படையினர், பொலிஸார் உள்ளிட்ட அனைத்து தொடர்புடைய அரச துறைகளின் பங்கேற்புடன் நடைபெற்றது.



டெங்கு வைரஸ் வகைகள் மாறிவரும் நிலை, நோய் எதிர்ப்பு சக்தி தொடர்பான மாற்றங்கள் மற்றும் திருகோணமலை மாவட்டத்தில் நோய் பரப்பி அதிகரித்திருக்கும் நிலை ஆகியவற்றை கவனத்தில் கொண்டு, மாவட்ட மட்ட ஒருங்கிணைந்த நடவடிக்கையை மேலும் வலுப்படுத்துவது தொடர்பாக இக்கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது.

# மட்டக்களப்பு வைத்தியசாலையின் பதில் பணிப்பாளராக முரளீஸ்வரன்

மட்டக்களப்பு, ஜூலை. 02

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் பதில் பணிப்பாளராக, மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் வைத்தியகலாநிதி மருத்துவர் இராசரெத்தினம் முரளீஸ்வரன் நேற்று புதன்கிழமை கடமையை பொறுப்பேற்றுக் கொண்டார்.

அங்கு ஏலவே பணியாற்றிய பணிப்பாளர் ஓய்வு பெற்றதையடுத்து ஏற்பட்ட வெற்றிடத்தை நிரப்பும் வரையில் இத் தற்காலிக நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

மிக விரைவில் நிரந்தரப் பணிப்பாளர் ஒருவர் நியமிக்கப்படுவார் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (அ)

# கதிர்காமம் பாதயாத்திரிகர்களுக்கு உணவுப் பொதிகள் வழங்கிவைப்பு!



காரைதீவு, ஜூலை. 02

காரைதீவு வெற்றியின் கரங்கள் அமைப்பு யாழ்.-கதிர்காமம் பாதயாத்திரிகர்களுக்கு உணவுப் பொதிகளை வழங்கியது.

பாதயாத்திரிகர்களின் நீண்ட ஆன்மீகப் பயணத்துக்குப் பக்கபலமாக நிற்கும் வகையில், "வெற்றியின் கரங்கள்" அமைப்பு, ஒரு மனிதாபிமான சேவையை முன்னெடுத்திருந்தது.

அதன்படி, கடந்த திங்கள் கிழமை மடத்தடி மீனாட்சி அம்மன் கோயில் ஆலயத்தின் முன்றலில், பாதயாத்திரையில் ஈடுபட்டிருந்த 130 இற்கும் மேற்பட்ட யாத்திரிகர்களுக்கு அத்தியாவசிய உணவுப் பொதிகளும், நீர் போத்தல்களும் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

"வெற்றியின் கரங்கள்" அமைப்பு, இதுபோன்ற சமூக சேவைகளைத் தொடர்ந்து செய்து வருகின்றதுடன், எதிர்காலத்திலும் இப்படியான மக்கள் நலப் பணிகளை விரிவாக்கத் திட்டமிட்டுள்ளது. (அ)

# ரூ. 20இலட்சம் செலவில் அபிவிருத்திப் பணிகள்!

**குகதாசன் எம்.பியால் அங்குரார்ப்பணம்**



திருமலை, ஜூலை. 02

2026 ஆம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ் 20 இலட்சம் ரூபாய் செலவில், குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள திரியாய் தமிழ் மகா வித்தியாலயத்துக்கு யானை அச்சுறுத்தலில் இருந்து பாதுகாக்கும் பொருட்டு மதில் அமைப்பதற்கான பணிகள் நேற்று திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசனால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டன.

இதில் குச்சவெளிப் பிரதேச செயலாளர் சியாகுல் ஹக், பிரதேச செயலக அதிகாரிகள், பிரதேச சபை உறுப்பினர் அ.தனுசன், வலயக்கல்வி அலுவலர்கள், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், பெற்றார்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (அ)

# பொசன் பண்டிகை காலத்தில் வீதி விபத்துகள் குறைவடைவு

கொழும்பு, ஜூலை. 01

வெசாக் மற்றும் பொசன் பௌர்ணமி காலப்பகுதியில் வீதி விபத்துகளின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். ஒரு நாளுக்கு சராசரியாக 4 முதல் 7 விபத்துகள் மட்டுமே பதிவாகியுள்ளதாகவும், போதைப்பொருள் பாவனை, அதிக சத்தம் மற்றும் அதிவேகப் பயணம் ஆகியனவும் கணிசமாக குறைந்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

அதேவேளை, போக்குவரத்து விதிகளை மீறிய வாகனங்களுக்கு எதிராக தீவிர நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

குளியாப்பிட்டிய பகுதியில் 80 வாகனங்களும், கிளிநொச்சியில் 30 வாகனங்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதுடன், உரிமம் இன்றி வாகனம் செலுத்திய பலரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பெற்றோரின் அனுமதியுடன் உரிமம் இன்றி வாகனம் செலுத்திய சிறார்களுக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும், ஆயிரத்துக்கும் அதிகமான ஓட்டோக்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதுடன், விதிமீறல்களுக்கு 50 ஆயிரம் முதல் 75 ஆயிரம் ரூபாய் வரை அபராதம் விதிக்கப்படுவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சமீப காலங்களில் இடம்பெறும் பெரும்பாலான விபத்துகளுக்கு மோட்டார் சைக்கிள்களே காரணமாக உள்ளதாகவும், அதிவேகம், மதுபோதையில் வாகனம் செலுத்துதல், தலைக்கவசம் அணியாமை மற்றும் பொறுப்பற்ற ஓட்டுதலே முக்கிய காரணங்களாக இருப்பதாகவும் பொலிஸார் சுட்டிக்காட்டினர்.

# அம்பாறையில் ஆலயங்களுக்கு சந்நிதியான் ஆச்சிரமத்தால் உதவி



அம்பாறை, ஜூலை. 02

வடமராட்சி தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தால் மட்டக்களப்பு கல்முனைப் பகுதியில் அமைந்துள்ள சிறீ நாககன்னி அம்மன் ஆலயத்தின் கோரிக்கைக்கு அமைவாக கட்டுமானப் பணிகளுக்காக 150,000 ரூபா நிதி ஆச்சிரம முதல்வர் சாதனை தமிழன் கலாநிதி செ.மோகனதாஸ் சுவாமிகளால் நேரடியாக சென்று வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

மேலும் சந்நிதியிலிருந்து 37 ஆவது நாளாக கதிர்காமம் பாதயாத்திரை மேற்கொள்ளும் யாத்திரிகர்களுக்கு அம்பாறை தம்பட்டை ஆலடி விநாயகர் ஆலயத்தில் வைத்து, 09 ஆவது தடவையாக நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

இந்த உதவிகளையும் ஆச்சிரம முதல்வர் சாதனைத் தமிழன் கலாநிதி செ.மோகனதாஸ் சுவாமிகள் தொண்டர்களுடன் நேரடியாகச் சென்று வழங்கினார். (அ)

# மட்டக்களப்பில் உள்ள உணவகத்தில் தீ விபத்து!



மட்டக்களப்பு, ஜூலை. 02

மட்டக்களப்பு, பார் வீதியில் அமைந்துள்ள உணவகம் ஒன்றில் திடீரென தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்த உணவகத்தில் திடீரென தீப்பிடித்ததைத் தொடர்ந்து, அங்குப் பெரும் பரபரப்பு நிலவியது.

சம்பவ இடத்துக்கு விரைந்த மாநகர சபையின் தீயணைப்புப் படையினர், துரிதமாகச் செயல்பட்டுத் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.

இந்தத் தீ விபத்தினால் உணவகத்தில் ஏற்பட்ட சேதங்கள் குறித்து மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (அ)

# காரையடி பிள்ளையாருக்கு நாளை மகாகும்பாபிஷேகம்

அம்பாறை, ஜூலை. 02

கிழக்கிலங்கை காரைதீவு காரையடி அம்பாறை பிள்ளையார் ஆலய புனராவத்தன அஷ்டபந்தன ஏக குண்டபக்ஷ மஹா கும்பாபிஷேக குடமுழுக்கு பெருஞ்சாந்திவிழா இன்று வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

அதனையொட்டிய எண்ணெய் காப்பு சாத்தும் நிகழ்வு நேற்று நடைபெற்றது.

கும்பாபிஷேக பிரதம குரு சிவஸ்ரீ சண்முக மகேஸ்வரக் குருக்கள் தலைமையிலான சிவாச்சாரியார்கள் கிரியைகளை நடத்தி வருகின்றனர். (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## பொருளாதார வளர்ச்சி...

அடையாளங் கண்டு அவற்றை வெற்றிகொள்ள அரசாங்கத்துடன் கைகோர்க்குமாறு அனைத்து தொழில் முனைவோருக்கும் அழைப்பு விடுத்தார்.

இப்பணியை வெற்றிகொள்வதற்கான தமது முன்மொழிவுகள் மற்றும் இத்துறையில் தற்போது எழுந்துள்ள பிரச்னைகள் தொடர்பான அறிக்கையொன்றை கூடிய விரைவில் சமர்ப்பிக்குமாறும் ஜனாபதி கோரிக்கை விடுத்தார்.

நாட்டின் பொருளாதார வளர்ச்சியை துரிதப்படுத்துவதற்காக அடுத்த ஆண்டில் மூலதனச் செலவாக 2 டிரில்லியன் ரூபாவை ஒதுக்க எதிர்பார்க்கப்படுவதாகவும், இதன் மூலம் ஏற்படும் டொலர் தேவையை ஈடுசெய்ய ஏற்றுமதித் துறையின் அதிகபட்ச பங்களிப்பை அரசாங்கம் எதிர்பார்ப்பதாகவும் ஜனாதிபதி மேலும் குறிப்பிட்டார்.

டொலர் வருமானத்தை அதிகரிப்பதற்காக தகவல் தொழில்நுட்பம், மின் மற்றும் இலத்திரனியல் துறைகளில் இருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய விரிவான பங்களிப்பு குறித்து இங்கு விரிவாக ஆராயப்பட்டது.

தற்போது இலங்கையின் மூன்றாவது பெரிய ஏற்றுமதி வருமானத் துறையாக விளங்கும் தகவல் தொழில்நுட்பத் துறையின் மூலம் வருடத்திற்கு 05 பில்லியன் டொலர் ஏற்றுமதி வருமானத்தை ஈட்டும் சாத்தியம் காணப்படுவதாகவும், தற்போது சுமார் 500 மில்லியன் டொலர்களாக உள்ள மின் மற்றும் இலத்திரனியல் துறையின் ஏற்றுமதி வருமானத்தை 2 பில்லியன் டொலர்களாக அதிகரிக்கும் சாத்தியம் காணப்படுவதாகவும் இங்கு சுட்டிக்காட்டப்பட்டது.

தகவல் தொழில்நுட்பம், மின் மற்றும் இலத்திரனியல் துறைகளில் இலங்கையை ஒரு உலகளாவிய வர்த்தகநாமமாக மாற்றுவதற்கான சாத்தியக்கூறுகள் மற்றும் இந்த இரண்டு துறைகளுக்கும் தொடர்பான உயர்தர தொழிலாளர் படை இலங்கையில் உள்ளதால், அவர்களுக்கு தேவையான வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்தியின் அவசியம் குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

அத்துடன், இத்துறைகளுக்கு தொடர்பான தொழில்நுட்ப பாகங்களை இறக்குமதி செய்வதில் உள்ள சிக்கல்கள், துறைமுக நகரத்தை அண்டிய நிறுவனங்கள் வங்கி முறைமையுடன் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்வதில் உள்ள தடைகள், உள்நாட்டு வர்த்தகர்களின் உற்பத்திகளை உள்நாட்டு சந்தையில் ஊக்குவிப்பதில் எழுந்துள்ள பிரச்சினைகள் உட்பட இத்துறையில் நடவடிக்கைகளை முன்னெடுக்கும் போது முகங்கொடுக்கும் சவால்கள் குறித்து இதன் போது வர்த்தகர்கள் ஜனாதிபதிக்கு தெளிவுபடுத்தியதுடன், அத்தடைகளை நீக்குவது உள்ளிட்ட மேற்கொள்ளப்பட வேண்டிய சட்ட திருத்தங்கள் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

கைத்தொழில்துறையினரின் பிரச்சினைகள் மற்றும் முன்மொழிவுகளை நேரடியாக பெற்றுக்கொள்வதற்கும் அவற்றிற்கு உடனடி தீர்வுகளை வழங்குவதற்கும் சம்பந்தப்பட்ட தரப்பினரை பிரதிநிதித்துவப்படுத்தும் விசேட பிரிவொன்றை ஸ்தாபிப்பது குறித்தும் இதன் போது கவனம் செலுத்தப்பட்டது.

அத்துடன், இத்துறைகளில் வசதிகளை விரிவுபடுத்துவதற்காக அரசாங்கம் ஏற்கனவே திட்டமிட்டுள்ள வேலைத்திட்டங்கள் குறித்தும் இங்கு வர்த்தகர்களுக்கு தெளிவுபடுத்தப்பட்டது. (அ)

## கைபேசி, கணினி...

விசாரணையில் இருந்து குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் தற்போதைய பணிப்பாளர் ஷானி அபேசேகரவை நீக்கவேண்டும் என்ற கோரிக்கையை நீதவான் நிராகரித்தார்.

இரண்டாவது கோரிக்கையான, காவலில் உள்ள சந்தேக நபரான சுரேஷ் சாலேயுக்கு சட்டக் கடமைகளுக்குத் தேவையான செய்தித்தாள்கள், எழுதப்பட்ட ஆவணங்கள் மற்றும் சட்டக் கோவை புத்தகங்களை வழங்குவதற்கு அனுமதி கோரிய விண்ணப்பத்தையும் நீதவான் நிராகரித்தார்.

மேலும், குற்றவியல் நடைமுறைச் சட்டக் கோவையின் 127ஆம் பிரிவின் கீழ், சந்தேக நபர் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் அல்லாத பொதுவானதொரு அறிக்கையை நீதவான் முன்னிலையில் வழங்குவதற்கு அனுமதிக்குமாறு விடுக்கப்பட்ட கோரிக்கையையும் நீதவான் நிராகரித்தார்.

இவ்வாறான அறிக்கை தற்போது நடைபெற்று வரும் விசாரணைகளுக்கு இடையூறை ஏற்படுத்தலாம் என நீதவான் இதன்போது சுட்டிக்காட்டினார்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் முதலாவது மற்றும் இரண்டாவது சந்தேக நபர்களுக்கு எதிராக மேலும் சான்றுகள் இல்லை என்ற அடிப்படையில், அவர்களை விடுவிக்கக் கோரி தாக்கல் செய்யப்பட்ட விண்ணப்பத்தையும் நீதவான் நிராகரித்தார்.

எனினும், மூன்றாவது சந்தேக நபரான சுரேஷ் சாலே தொடர்பான கோரிக்கையை ஏற்றுக்கொண்ட நீதவான், அவரை நீதிமன்றத்தில் நேரில் முன்னிலைப்படுத்தத் தேவையில்லை என்ற கோரிக்கைக்கு அனுமதி வழங்கியதுடன், எதிர்கால நீதிமன்றத் தவணைகளின் போது காணொளித் தொழில்நுட்பம் ஊடாக அவரை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துமாறு உத்தரவிட்டார்.

அதேநேரம், மூன்றாவது சந்தேக நபரைச் சட்டத்தரணிகள் அணுகுவது தொடர்பான விடயத்தில் நீதிமன்றக் கண்காணிப்பை கோரிய விண்ணப்பத்தையும் நீதவான் நிராகரித்தார்.

இந்த வழக்கு எதிர்வரும் செப்ரெம்பர் 2ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. அன்றைய தினத்தில், வழக்கின் முதலாவது முறைப்பாட்டாளர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணியின் கோரிக்கை மீதான உத்தரவும் பிறப்பிக்கப்படும் என நீதவான் தெரிவித்தார்.

மேலும், பாதிக்கப்பட்ட தரப்பு சார்பில் முன்னிலையான இராணுவ அதிகாரி அஜித் சாந்த குமார ஜயதிலக்க, சட்டத்தரணி ஒருவரின் உதவி இன்றி நீதிமன்றத்தில் தனிப்பட்ட ரீதியில் சமர்ப்பணங்களைச் செய்வதற்கு அனுமதி கோரி சமர்ப்பித்த விண்ணப்பம் மீதான உத்தரவும் செப்ரெம்பர் 2ஆம் திகதி வழங்கப்படும் என நீதவான் மேலும் தெரிவித்தார். (அ)

## அவசரகால நிலை...

சந்தர்ப்பங்களில் நீடிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## வவுனியா முன்னாள்...

பொறுப்பதிகாரி, சிரேஷ்ட பொலிஸ் பரிசோதகர் ஆர். எம். யே. எஸ். ரத்னமலலா தெரிவித்துள்ளார்.

வவுனியா மாநகரசபையின் செங்கோல், முதல்வரின் பதக்கம் மற்றும் அதிகாரப்பூர்வ ஆடை ஆகியவை காணாமற்போயுள்ளதாக, மாநகர சபையின் செயலாளர் நேற்று முன் தினம் வவுனியா தலைமைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

அந்த முறைப்பாட்டின் அடிப்படையில், சிசிடிவி காட்சிகள் உள்ளிட்ட ஆதாரங்களை ஆய்வு செய்து, வவுனியா தலைமைப் பொலிஸார் விசாரணைகளை தீவிரப்படுத்தினர்.

விசாரணைகளின் முன்னேற்றத்தைத் தொடர்ந்து, முன்னாள் மேயர் உள்ளிட்ட சிலரை கைது செய்வதற்கான அனுமதியை நேற்று வவுனியா நீதவான் நீதிமன்றத்தில் பொலிஸார் கோரியிருந்தனர்.

பொலிஸாரின் கோரிக்கையை பரிசீலித்த நீதவான், வவுனியா மாநகரசபையின் முன்னாள் மேயர் சு. காண்டீபன் உட்பட நான்கு பேரை கைது செய்து உடனடியாக நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துமாறு உத்தரவிட்டார்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா தலைமைப் பொலிஸார் தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றனர். (அ)

## ஆசிய அபிவிருத்தி...

சமீபத்தில் இலங்கையைத் தாக்கிய 'டித்வா' சூறாவளி காரணமாகப் பாதிக்கப்பட்ட பகுதிகளை மறுசீரமைக்கும் மற்றும் புனரமைக்கும் பணிகளுக்காகவே இந்த அவசர நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

இலங்கையின் மீட்பு நடவடிக்கைகளுக்குப் பக்கபலமாக இந்த நிதி பயன்படுத்தப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## யாழ்.துணைவேந்தருக்கு...

திகதியிட்டுள்ளது.

யாழ்.பல்கலைக்கழகத்தின் முன்னாள் கலைப்பீடாதிபதியான சிவசுப்பிமணியம் ரகுராம் தன்னை துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கினார் என முன்னாள் பல்கலைக்கழக மாணவியும் இரண்டு வருட காலமாக தற்காலிக துணை விரிவுரையாளராகவும் கடமையாற்றிய பெண் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு செய்ததை , அடுத்து பல்கலைக்கழக மட்டத்தில் விசாரணை குழு அமைக்கப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், முன்னாள் கலைப்பீடாதிபதி சிவசுப்ரமணியம் ரகுராம் குறித்த முன்னாள் மாணவியுடன் உரையடாடிய தொலைபேசி ஒலிப்பதிவு என சில ஒலிப்பதிவுகள் ரிக்ரொக் தளம் மற்றும் முகநூல்களில் பகிரப்பட்டன.

அதன் அடிப்படையில் சிலரால் முகநூல்களிலும் யூரியூப் தளத்திலும் கருத்துக்கள் பகிரப்பட்டன.

இந்நிலையிலையே, பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் நிகழ்நிலை காப்புச் சட்டத்தின் பிரிவு 20 இன் கீழ் யாழ்ப்பாண பல்கலைக்கழக முன்னாள் கலைப்பீடாதிபதி சிவசுப்பிரமணியம் ரகுராமால் வழக்கு தொடரப்பட்டுள்ளது. அதில் 14 பேர் எதிர் மனுதாரர்களாக குறிப்பிடப்பட்டுள்ளனர்

குறித்த 14 பேரில் , சிவசுப்பிரமணியம் ரகுராம் மீது குற்றச்சாட்டை முன்வைத்துள்ள மாணவி , அவரது நண்பியான முன்னாள் மாணவி , யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் ஆகியோருடன் இணைய இடையீட்டாளர்களாக யூரியூப் , ரிக்ரொக் , பேஸ்புக் ஆகியோர் மீது மனுதாரர் தொடர்பிலான தடை செய்யப்பட்ட கூற்றுக்களை பிரசுத்தமைக்கு எதிராக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது

குறித்த வழக்கை நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொண்ட பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் நிபந்தனையுடனான கட்டளையை பிறப்பிப்பதா ? இல்லையா என்பதனை முடிவு செய்வதற்காக வழக்கை எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு திகதியிட்டுள்ளார். (அ)

## பஸ் கட்டணம்...

6ஆம் திகதி முதல் அமுலுக்கு வரவுள்ளது.

இதன்படி, குறைந்தபட்ச பஸ் கட்டணம் 30 ரூபாவிலிருந்து 34 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

மேலும், சாதாரண சேவையின் கீழ் 100 கிலோமீற்றருக்கும் குறைவான பயணங்களுக்கு பஸ் கட்டணம் 12 வீதத்தாலும், 100 கிலோமீற்றர் அல்லது அதற்கு மேற்பட்ட பயணங்களுக்கு 20 வீதத்தாலும் அதிகரிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, சொகுசு பேருந்துகளுக்கான கட்டணமும் திருத்தப்பட்டுள்ளது. முதல் 100 கிலோமீற்றர் வரையிலான பயணங்களுக்கு 12 சதவீதத்தாலும், 100 கிலோமீற்றருக்கு மேற்பட்ட பயணங்களுக்கு 15 சதவீதத்தாலும் கட்டணம் உயர்த்தப்படவுள்ளதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

## தனது உண்ணாவிரதத்தை...

போராட்டத்தை தற்காலிகமாகக் கைவிட்டுள்ளார்.

தனது சட்ட ஆலோசகர்கள் வழங்கிய முக்கிய அறிவுரைகள் மற்றும் ஆலோசனைகளை அடுத்தே, அவர் இந்த முடிவை எடுத்துள்ளதாகத் தற்போதைய தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஈஸ்டர் ஞாயிறு தொடர் குண்டுவெடிப்புச் சம்பவங்கள் குறித்து மறுவிசாரணைகளை முன்னெடுத்து வரும் குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள், கடந்த சில தினங்களுக்கு முன்னர் சுரேஷ் சாலேயைக் கைது செய்து தங்களது காவலில் வைத்து விசாரணைக்கு உட்படுத்தி வருகின்றனர்.

இந்த விசாரணைகளின்போது தனக்கு இழைக்கப்படும் சில அநீதிகள் அல்லது விசாரணை நடைமுறைகளில் உள்ள அதிருப்தி காரணமாக அவர் சி.ஐ.டி. காவலில் இருந்தவாறே இந்த உண்ணாவிரத போராட்டத்தை ஆரம்பித்திருந்தார்.

இந்நிலையில், அவரை நேரில் சந்தித்து ஆலோசனைகளை வழங்கிய அவரது சட்டப் பிரதிநிதிகள், தற்போதைய சூழ்நிலையில் உண்ணாவிரதமிருப்பது சட்ட ரீதியான நகர்வுகளுக்குப் பாதகமாக அமையலாம் எனச் சுட்டிக்காட்டியதை அடுத்து அவர் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவந்துள்ளார்.

அரச புலனாய்வுச் சேவையின் முன்னாள் பணிப்பாளர் என்ற ரீதியில், ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான பல முக்கிய புலனாய்வுத் தகவல்களை மூடிமறைத்தமை அல்லது கடமைகளைத் தவறியமை உள்ளிட்ட பல கோணங்களில் அவரிடம் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் சிறப்புப் பிரிவினர் தொடர்ந்து தீவிர வாக்குமூலங்களைப் பதிவு செய்து வருகின்றனர்.

அவரது உடல்நிலை தற்போது சீராக உள்ளதாகத் தெரிவிக்கப்படும் அதேவேளை, இந்த விவகாரம் தொடர்பான மேலதிக விசாரணை அறிக்கைகள் விரைவில் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## இலங்கையில் உணவு...

வீண் அச்சம் கொள்ளவேண்டியதில்லை.

எல் நினோ காலநிலை பற்றி பேசி, இது பற்றி அச்சமூட்டுகின்றனர். நாம் உற்பத்தி நடவடிக்கையில் ஈடுபட்டுவருகின்றோம். எனவே, பாரிய தாக்கம் எதுவும் எமக்கு இல்லை." எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

அதேவேளை, வெளிநாட்டில் இருந்து தற்போது இலங்கைக்கு ரின்மீன் இறக்குமதி செய்யப்படுவதில்லை. இப்படி பல நல்ல விடயங்கள் நடந்தாலும், எதிர்மறையான விடயங்கள் பற்றியே சமூகத்தில் பிரசாரம் முன்னெடுக்கப்பட்டுவருகின்றது என அமைச்சர் மேலும் கூறியுள்ளார். (அ)

## இழுவைமடியை தடுக்கும்...

பொருளாதார நிவாரணத் திட்டங்கள் தயாராகி வருகின்றன.

இலங்கை - இந்திய கடற்றொழிலாளர் பிரச்னைக்கு இராஜதந்திர ரீதியில் தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்படும்.

கடலில் காணாமற்போவோரை மீட்க ஜப்பான் நிதியுதவியுடன் 2 அதிநவீன மீட்புப் படகுகள் இந்த வருடத்துக்குள் சேவையில் ஈடுபடுத்தப்படும்.

மீன்பிடித்துறையை நவீனமயமாக்க நோர்வே, ஜப்பான் நாடுகளின் ஒத்துழைப்பு பெறப்படும்.

டிட்வா புயலால் பாதிக்கப்பட்டோருக்கு 138 புதிய படகுகள், நஷ்டஈடு வழங்கப்பட்டுள்ளதுடன், 100 இற்கும் மேற்பட்ட படகுகள் பழுதுபார்க்கப்பட்டுள்ளன.

சிறிய படகுகளுக்கு 25 லீற்றரும், பெரிய படகுகளுக்கு 150,000 லீற்றரும் மண்ணெண்ணெய் மானியமாக வழங்கப்படுகிறது.

இந்தநிலையில் கடந்தகால அரசாங்கங்களை போலன்றி, தற்போதைய அரசு கடற்றொழிலாளர் வாழ்வாதாரத்வஹூக்கு முதலிடம் வழங்கி நிலையான தீர்வை வழங்கும் - என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu

# டிஜிற்றல் "சிசு செரிய" பாடசாலை பஸ் சேவை இலங்கையிலேயே முதல் முறையாக வடக்கில்!

## கொடிகாமம் பஸ் நிலையத்தில் நேற்று ஆரம்பம்



யாழ்ப்பாணம், ஜூலை. 02

பாடசாலை மாணவர்களின் பாதுகாப்பான போக்குவரத்தை உறுதிப்படுத்தும் நோக்கில், இலங்கையிலேயே முதற் தடவையாக டிஜிற்றல் தொழில்நுட்பத்துடனான "சிசு செரிய" பாடசாலை பஸ் சேவை, கொடிகாமம் மத்திய பஸ் நிலையத்தில் நேற்று புதன்கிழமை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

வடக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட இந்த ஆரம்ப நிகழ்வில், கடற்றொழில் அமைச்சர் இ.சந்திரசேகர், பாராளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன் ஆகியோர் கலந்துகொண்டு சேவையை ஆரம்பித்து வைத்தனர்.

அத்துடன், சாவகச்சேரி பிரதேச செயலாளர், வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் தலைவர், பொது முகாமையாளர், வட இலங்கை தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் மற்றும் யாழ். மாவட்ட பிராந்திய கூட்டிணைக்கப்பட்ட பஸ் கம்பனிகளின் இணையத் தலைவர் உள்ளிட்ட பலரும் இந்நிகழ்வில் பங்கேற்றனர்.

பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் போக்குவரத்து வசதிக்கான பிரத்தியேகச் சேவையான "சிசு செரிய" பஸ் சேவை நாடு முழுவதும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் கீழ் மாணவர்களிடமிருந்து அரைவாசிப் பயணக் கட்டணம் மாத்திரமே அறவிடப்படுவதுடன், எஞ்சிய தொகை அரசாங்கத்தால் மானியமாக வழங்கப்படுகின்றது.

தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் முழுமையான ஒத்துழைப்புடன் உசனிலிருந்து இரண்டு தனியார் பஸ்கள் இச்சேவையில் இணைக்கப்பட்டுள்ளன. உசனிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் செல்லும் பஸ் சேவையும், உசனிலிருந்து பருத்தித்துறை நோக்கிச் செல்லும் பஸ் சேவையுமே ஆரம்பித்து வைக்கப்பட்டன.

இப்புதிய சேவையின் சிறப்பம்சமாக, மாணவர்களின் விவரங்கள் மற்றும் அவர்களது பெற்றோரின் கைத்தொலைபேசி இலக்கங்கள் கணினியில் பதிவு செய்யப்பட்டு, மாணவர்களுக்குப் பிரத்தியேக "டிஜிற்றல் அட்டை" ஒன்று வழங்கப்படும்.

மாணவர் பஸ்ஸில் ஏறி குறித்த டிஜிற்றல் அட்டையைத் தொடுதிரையில் காண்பித்தவுடனேயே, அவர் பஸ்ஸில் ஏறிய நேரம் உள்ளிட்ட விவரங்கள் பெற்றோரின் தொலைபேசிக்கு உடனடியாகக் குறுஞ்செய்தியாகச் சென்றடையும்.

அதேபோன்று, மாணவர் பஸ்ஸிலிருந்து இறங்கும்போதும் தொடுதிரையில் அட்டையைக் காண்பித்ததும், பாதுகாப்பாக இறங்கிய நேரத் தகவல் பெற்றோரின் தொலைபேசிக்குச் செல்லும். இதன் மூலம் பாடசாலைக்குச் செல்லும் மாணவர்களின் பாதுகாப்பு முற்று முழுதாக உறுதிப்படுத்தப்படுகின்றது.

மிகவும் முன்மாதிரியான இந்த டிஜிற்றல் செயற்றிட்டத்தை, தனியார் பஸ்ஸின் உரிமையாளரே தனது சொந்தச் செலவில் நடைமுறைப்படுத்தியுள்ளமை விசேட அம்சமாகும்.

வடக்கு மாகாணத்தின் வவுனியா மாவட்டத்தில் இம்மாதம் இரண்டு "சிசு செரிய" சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், யாழ்ப்பாணத்திலும் நேற்று இரண்டு சேவைகள் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

எதிர்காலத்தில் மாகாணத்தின் ஏனைய இடங்களுக்கும் இந்த பஸ் சேவைகள் விரிவுபடுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# மாகாணத் தேர்தலில் வடக்கு-கிழக்கைத் தவிர ஏனைய மாகாணங்களில் வெற்றி பெறுவோம்!

### கூறுகின்றது பொதுஜன பெரமுன



கொழும்பு, ஜூலை. 02

அரசாங்கத்தின் மீதான மக்களின் நம்பிக்கை சிதைவடைந்துள்ளது. மாகாணசபைத் தேர்தலை நடத்தினால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை தவிர்த்து ஏனைய மாகாணங்களில் பெரும்பான்மை பலத்துடன் அதிகாரத்தைக் கைப்பற்றுவோம் என சிறீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நடைபெற்ற தொகுதி அமைப்பாளர்களுடனான சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

போலியான வாக்குறுதிகள் மற்றும் கடந்த அரசாங்கங்கள் மீதான வெறுப்பு ஆகியவற்றை முன்னிலைப்படுத்தியே ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தேர்தலில் வெற்றிப் பெற்றார். ஆட்சிக்கு வந்த நாளில் இருந்து இன்றுவரை அரசியல் பழிவாங்களுக்கு மாத்திரம் முன்னுரிமையளிக்கப்பட்டுள்ளது.

பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு எவ்வித நிவாரணமும் வழங்கப்படவில்லை. மாறாக மக்களின் மீதே அதிக வரி சுமை திணிக்கப்பட்டுள்ளது. திறைசேரி நிரம்பி வழிகிறது என்று குறிப்பிட்டுக் கொண்டு சர்வதேச நாணய நிதியத்தை மகிழ்விப்பதால் நாட்டு மக்களுக்கு எவ்வித பயனும் கிடைக்காது.

தற்போதைய தருணத்தில் தேர்தல் ஒன்று இடம்பெறுமாயின் மக்கள் அரசாங்கத்துக்கு தக்க பாடத்தை புகட்டுவார்கள். மாகாண சபைத் தேர்தல் காலவரையறையின்றி பிற்போடப்பட்டுள்ளமைக்கு மக்கள் விடுதலை முன்னணியும் பொறுப்புக்கூறவேண்டும். மாகாண சபைத் தேர்தலை நடத்தினால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை தவிர்த்து ஏனைய மாகாணங்களில் பெரும்பான்மை பலத்துடன் அதிகாரத்தைக் கைப்பற்றுவோம் - என்றார். (அ)

# பஸ் சாரதிகள், நடத்துநர்களுக்கு வடமாகாணத்தில் புதிய சீருடை!

யாழ்ப்பாணம், ஜூலை. 02

வடமாகாணத்தில் சேவையில் ஈடுபடும் தனியார் பஸ் சாரதிகள் மற்றும் நடத்துநர்களுக்கான புதிய சீருடை, போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் பிமல் ரத்நாயக்க தலைமையில் நேற்று அறிமுகப்படுத்தப்பட்டது.

நேற்று கிளிநொச்சியில் அமைந்துள்ள வடமாகாண வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகார சபைக்கு சென்ற அமைச்சரை அதிகார சபையின் தலைவர் பொறியியலாளர் எஸ்.விமலேஸ்வரன் வரவேற்றார்.

அதனைத் தொடர்ந்து அதிகார சபையின் செயற்பாடுகளை அமைச்சர் பார்வையிட்டதுடன், அதிகாரிகளுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

பின்னர், வடமாகாணத்தில் சேவையாற்றும் தனியார் பஸ் சாரதிகள் மற்றும் நடத்துநர்களுக்கான உத்தியோகபூர்வ சீருடை அறிமுகப்படுத்தப்பட்டது.

பயணிகள் நேரடியாக முறைப்பாடுகளை தெரிவிக்கக் கூடிய வகையில், வடமாகாண வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் தொலைபேசி இலக்கம் சீருடையிலேயே அச்சிடப்பட்டிருப்பது இதன் சிறப்பம்சமாகும்.

இந்த புதிய நடைமுறையின் மூலம், பொதுமக்களுக்கு மேலும் பொறுப்புணர்வுடனும் வினைத்திறனுடனும் கூடிய போக்குவரத்து சேவையை வழங்க முடியும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்நிகழ்வில் தேசிய மக்கள் சக்தியின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் மருங்கன் மோகன், தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் பிரதிநிதிகள், கலந்துகொண்டனர்.

# யாழ். வந்தார் புதிய ஆயர்!



யாழ்ப்பாணம், ஜூலை. 02

யாழ்ப்பாண மறைமாவட்டத்தின் புதிய ஆயராக திருத்தந்தை 14ஆம் லியோவினால் நியமனமிக்கப்பட்ட பேரருட்தந்தை அன்ரன் ரஞ்சித் பிள்ளைநாயகம் ஆண்டகை நேற்று புதன்கிழமை யாழ். மறைமாவட்டத்துக்கு விஜயம் மேற்கொண்டார்.

நேற்று யாழ். மறைமாவட்ட ஆயர் இல்லத்தில் குருமுதல்வர் அருட்தந்தை ஜோசப்தாஸ் ஜெபரட்ணம் மற்றும் குருக்களால் மாலை அணிவிக்கப்பட்டு வரவேற்கப்பட்ட பேரருட்தந்தை அன்ரன் ரஞ்சித் பிள்ளைநாயகம், ஆயர் இல்ல கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை யஸ்ரின் ஞானப்பிரகாசம் மற்றும் குருக்களுடனான கலந்துரையாடலிலும் பங்குபற்றினார். (அ)

# எல் நினோ தாக்கத்தை எதிர்கொள்ள ஜனாதிபதியின் தலைமையில் கூட்டம்!

கொழும்பு, ஜூலை. 02

எல் நினோ காலநிலை தாக்கத்தால் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய விளைவுகள் மற்றும் அதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொடர்பில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க அதிகாரிகளுடன் விரிவாக கலந்துரையாடியுள்ளார்.

ஜனாதிபதியின் தலைமையில் நடைபெற்ற தேசிய பேரிடர் முகாமைத்துவ சபைக் கூட்டத்தில் இந்த விடயங்கள் குறித்து ஆராயப்பட்டுள்ளன.

அதன்படி, எல் நினோ காலநிலையை எதிர்கொள்வதற்கான நடவடிக்கைகள், பேரிடர் முகாமைத்துவ அமைப்பில் மேற்கொள்ளப்பட வேண்டிய சீர்திருத்தங்கள் மற்றும் தேசிய பேரிடர் முகாமைத்துவ ஒருங்கிணைந்த பொறிமுறை தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், விவசாயம், குடிநீர் விநியோகம் மற்றும் மின்சார உற்பத்தித் துறைகளின் தயார்நிலை தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

அதற்கமைய, வனவிலங்கு சரணாலயங்களுக்குள் உள்ள குளங்களை விரைவாக புனரமைக்குமாறு சுற்றாடல் அமைச்சுக்கு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.

நீர்மின் உற்பத்தியை தொடர்ந்து பேணுவதற்காக நீர்த்தேக்கங்களின் நீர்மட்டத்தை முறையாக முகாமைத்துவம் செய்ய வேண்டியதன் அவசியத்தையும் இதன்போது ஜனாதிபதி வலியுறுத்தியுள்ளார்.

சூரிய சக்தியில் உற்பத்தியாகும் மின்சாரத்தை சேமிக்க தேவையான மின்கலங்களை விரைவாக இறக்குமதி செய்ய வேண்டியதன் முக்கியத்துவத்தையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, மண்சரிவு அபாயப் பகுதிகளில் வசிக்கும், குறிப்பாக நுவரெலியா மாவட்ட மக்களை நான்கு ஆண்டுகளுக்குள் மீள்குடியேற்றுவதற்கான திட்டமொன்றை தயாரிக்குமாறும் ஜனாதிபதி அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார். (அ)

# மாற்று திறனாளிகளுக்கு சிறப்பு அடையா அட்டை!

கொழும்பு, ஜூலை. 02

அரச நிறுவனங்களில் மாற்றுத்திறனாளிகளுக்கு முன்னுரிமை சேவைகளை வழங்குவதற்காக, சிறப்பு அடையாள அட்டைகள் அறிமுகப்படுத்தப்படவுள்ளன.

மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய சபை இதற்கான தீர்மானத்தை எடுத்துள்ளது. கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சர் உபாலி பன்னில தலைமையில், இடம்பெற்ற நிகழ்வில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இதேவேளை மாற்றுத்திறனாளிகளை விளிக்கும் போது, பயன்படுத்தப்பட வேண்டிய சொற்களஞ்சியத்தை உத்தியோகபூர்வ மொழிகள் திணைக்களத்துடன் இணைந்து வெளியிடவும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 02.07.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media